# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**மனு எண். 011/நகராட்சி/2019**
**நாள் : 11/04/2019**

**திருமதி *S.* சாயின் பானு,**
**சென்னை – 600 044.** – முறையீட்டு மனுதாரர்

**நகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்கள்,**
**பல்லவபுரம் நகராட்சி.** – எதிர் மனுதாரர்கள்

சென்னை, குரோம்பேட்டை, தி.சு. லட்சுமணன் நகர், இரண்டாவது தெரு, 3/40 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி S. சாயின் பானு அவர்களின் 10.01.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 11/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக பல்லவபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டுக் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## <u>ஆணை</u>

சென்னை, குரோம்பேட்டை, தி.சு. லட்சுமணன் நகர், இரண்டாவது தெரு, 3/40 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி S. சாயின் பானு என்பவர், தனது வீட்டிற்கு 007/042/00246 என்ற எண்ணில் குடிநீர் இணைப்பு பெறப்பட்டுள்ளதாகவும், அவ்விணைப்பிற்கான குடிநீர் கட்டணம் 2018–19 வரை செலுத்தப்பட்டிருந்தும், அக்குடிநீர் இணைப்பு பல்லவபுரம் நகராட்சிப் பணியாளர் திரு அன்பு என்பவரால் துண்டிக்கப்பட்டு விட்டது என்று தெரிவித்து அவ்விணைப்பினை மீளத் தருவதுடன், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் முறையீடு செய்துள்ளார்.

2. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் திருமதி S. சாயின் பானு குடியிருக்கும், தி.சு. லெட்சுமணன் நகர் 3/40 கதவு எண்ணுள்ள வீட்டிற்கான குடிநீர் இணைப்பு திருமதி ஜெபைதா பெயரில் உள்ள நிலையில், அவ்வீட்டிற்கு சம்பந்தமில்லாத முறையீட்டு மனுதாரர் பெயருக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதை எதிர்த்து நகராட்சியிடம் முறையீடு செய்யப்பட்ட நிலையில், முறையீட்டு மனுதாரர் பெயரில் உள்ள குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்று நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 21.03.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. 29.11.2018 அன்று காலை பத்து மணி அளவில் தனது வீட்டிற்கான குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்ட நிகழ்வினையும், தனக்கு எந்தவிதமான முன்னறிவிப்பும் வழங்காமல் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்துள்ளதுடன் நகராட்சிப் பணியாளர்களின் இத்தகைய நடவடிக்கை இயற்கை நியதிக்கு புறம்பானது என்று விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் தெரிவித்தார். மேலும், தன் வீட்டிற்கு போடப்பட்டிருக்கும் வரி விதிப்பு இரத்து செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார். எனவே, சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முறையீட்டு மனுதாரர் கேட்டுக்கொண்டார்.

4. குடிநீர் இணைப்பைத் துண்டித்த நகராட்சிப் பணியாளர் திரு என். அன்பு என்பவரிடமும் 21.03.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. பல்லவபுரம் நகராட்சி உதவிப் பொறியாளர் திரு வெங்கடேசன் மற்றும் குழாய் பொருத்துநர் திரு இளங்கோ ஆகியோர் அறிவுறுத்தியதின் அடிப்படையிலேயே முறையீட்டு மனுதாரரின் வீட்டிற்கான குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டது என்று விசாரணையின் போது திரு அன்பு தெரிவித்தார்.

5. நகராட்சி ஆணையரின் அறிக்கை, விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சிப் பணியாளர் அளித்த வாக்குமூலங்கள் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாரர் திருமதி S. சாயின் பானு குடியிருக்கும் தி.சு. லெட்சுமணன் நகர் 3/40 முகவரியில் உள்ள வீட்டிற்கு 007/042/00760 எண்ணில் சொத்துவரி விதிக்கப்பட்டு 30.04.2018 அன்று ரூ. 2,675/– வசூலிக்கப்பட்டு இரசீது வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, 16.05.2018 நாளிட்ட பல்லவபுரம் நகராட்சி ஆணையரின் செயல்முறை உத்தரவு மூலம் வழங்கப்பட்ட, 097/042/00246 எண்ணிட்ட புதிய குடிநீர் இணைப்பிற்கு 19.12.2018 அன்று ரூ. 505/– முறையீட்டு மனுதாரர் திருமதி S. சாயின் பானு அவர்களிடம் வசூலிக்கப்பட்டு இரசீதும் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரரின் பெயரில் உள்ள குடிநீர் இணைப்பு எந்தவித முன்னறிவிப்பின்றி 29.11.2018 அனறு நகராட்சிப் பணியாளர்களால் துண்டிக்கப்பட்டுள்ளது. நகராட்சிப் பணியாளர்களால் எந்தவித முன்னறிவிப்பின்றி மனுதாரரின் வீட்டிற்கான குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் மனுதாரர் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளார். முறையீட்டு மனுதாரரின் மனு சம்பந்தமாக மனுதாரர் மற்றும் சம்பந்தப்பட்ட நகராட்சிப் பணியாளர்களிடம் நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

6. குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தால், மனுதாரருக்கு முறையாகத் தெரிவித்து, அவரிடம் விளக்கம் பெற்றபின்பு உரிய காரணத்துடன் குடிநீர் இணைப்புத் துண்டிக்கப்பட்டிருந்தால், நகராட்சி அலுவலர்களின் நடவடிக்கை இயற்கை நியதிக்கு உட்பட்டதாக இருந்திருக்கும். இந்நேர்வில் பல்லவபுரம் நகராட்சி அலுவலர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை இல்லை என அறிய முடிகிறது. இயற்கை நியதிக்குப் புறம்பாக, மனுதாரருக்கு எந்தவித முன்னறிவிப்பும் வழங்காமல் குடிநீர் இணைப்பினைத் துண்டித்த நகராட்சிப் பணியாளர்களின் செயல் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இல்லை. எனவே, குடிநீர் துண்டிப்புக்குக் காரணமான நகராட்சி இளநிலைப் பொறியாளர் திரு வெங்கடேசன், குழாய் பொருத்துநர் திரு இளங்கோ மற்றும் பொருத்துநருக்கு உதவியாளராகப் பணியுரியும் துப்புரவுப் பணியாளர் திரு அன்பு ஆகியோர் மீது இம்முறைமன்ற நடுவம் தனது கண்டனத்தையும் பதிவு செய்கிறது. இயற்கை நியதிக்கு புறம்பாக துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்பினை முறையீட்டு மனுதாரர் வீட்டிற்கு மீளவும் வழங்கப்படவேண்டும் என்று 21.03.2019 அன்று நடைபெற்ற விசாரணையின் போது இம்முறைமன்ற நடுவம் விசாரணையின் நடுவே அறிவுறுத்தியது.

அதனைத் தொடர்ந்து பல்லவபுரம் நகராட்சி உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு 23.03.2019 அன்றே முறையீட்டு மனுதாரரின் வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது என்று 23.03.2019 நாளிட்ட கடிதத்தில் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். நகராட்சி ஆணையர் மேற்கொண்ட உடனடி நடவடிக்கையினைப் பாராட்டி இம்முறைமன்ற நடுவம் பதிவு செய்கிறது. துண்டிக்கப் பட்ட குடிநீர் இணைப்பு முறையீட்டு மனுதாருக்கு மீண்டும் வழங்கப்பட்டு விட்ட நிலையில் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக்கொள்ள முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2019–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 11–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **திருமதி S. சாயின்பானு,**
   **எண்.3/40, 2–வது தெரு,**
   **தி.சு. லட்சுமணன் நகர்,**
   **குரோம்பேட்டை,**
   **சென்னை – 600 044.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **பல்லவபுரம் நகராட்சி,**
   **குரோம்பேட்டை,**
   **சென்னை – 600 044.**

3. **நகராட்சி நிர்வாக ஆணையர்,**
   **இராஜா அண்ணாமலைபுரம்,**
   **சென்னை – 600 028.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**